# 18-11-2024 செய்தி

## தலைநகர் சண்டீகர் யாருக்கு? பஞ்சாப் ஹரியானா அரசுகள் மோதல்

- சண்டிகர், பஞ்சாப் மாநிலத்துக்கே சொந்தம், அங்கு ஹரியானா சட்டபேரவை கட்ட ஓர் அங்குலம் நிலம் கூட ஒதுக்கக் கூடாது என்று பஞ்சாப் மாநில அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.
- ஒருங்கிணைந்த பஞ்சாபில் இருந்து பிரிக்கப்பட்டு, கடந்த 1966-ஆம் ஆண்டில் ஹரியானா தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- தலை நகரான சண்டீகருக்கு இரு மாநிலங்களும் உரிமை கொண்டாடிய நிலையில் அப்பகுதி யூனியன் பிரதேசமாக்கப்பட்டது.
- இருமாநிலங்களுக்கும் பொதுவான தலைநகராக உள்ள சண்டீகர் தற்போது பஞ்சாப் ஆளுநரின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது.
- பொது கட்டட வளாகத்திலேயே இரு மாநில சட்டப் பேரவைகள் மற்றும் தலைமைச் செயலகங்கள் செயல்பட்டு வருகின்றன.
- தலைநகர் பிரச்னை பல்லாண்டுகளாக நீடித்துவரும் நிலையில் சண்டீகரில் தனியாக சட்டப் பேரவை கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை ஹரியானா பாஜக அரசு முன்னெடுத்துள்ளது.
- சண்டீகரில் உள்ள ஐ.டி. பார்க் சாலையில் தங்களுக்கு ஒதுக்கப்படும் 10 ஏக்கர் நிலத்துக்கு மாற்றாக அந்த யூனியன் பிரதேச நிர்வாகத்துக்கு பஞ்ச்குலாவில் 12 ஏக்கர் நிலத்தை வழங்க ஹரியானா அரசு முடிவு செய்தது.

**ஹரியானாவுக்கு உரிமை கிடையாது - பஞ்சாப்:**

- சண்டீகர் பஞ்சாபுக்கு மட்டுமே - சொந்தமானது. அது பஞ்சாபின் தலைநகர் மட்டுமே, அங்கு சட்டப்பேரவை கட்டும் உரிமை ஹரியானாவுக்கு கிடையாது. சண்டீகர் மீதான உரிமைக்காக பஞ்சாப் தொடர்ந்து போராடும்.
- ஹரியானா தனி மாநிலமாக பிரிக்கப்பட்டபோது தனக்கென தலைநகரை அந்த மாநிலம் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. ஆனால் 60 ஆண்டுகளாகியும் தனக்கென தலைநகரை உருவாக்குவதில் ஹரியானா தோல்வி கண்டுவிட்டது.

**இரு மாநிலங்களுக்கும் சொந்தம்-ஹரியானா:**

- சண்டீகர் இரு மாநிலங்களுக்கும் சொந்தமான பகுதியாகும். ஹரியானா, பஞ்சாபின் இளைய சகோதரர். எனவே, தலைநகரை முன் வைத்து சகோதரத்துவத்தை பாழாக்க வேண்டாம் என்று பஞ்சாப் மாநில தலைவர்களைக் கேட்டுக் கொண்டனர்.

## பேரழிவை நோக்கிய பயணம்!

- ஐக்கிய நாடுகள் முன்னின்று நடத்தும் இந்த சர்வதேச மாநாட்டில் 200 நாடுகள் பங்கேற்கின்றன. முந்தைய பருவநிலை உச்சி மாநாடுகளைப் போலல்லாமல், இந்த முறை ஏனோ போதிய கவனமும், முக்கியத்துவமும் பாக்கு மாநாடு பெறவில்லை.
- பருவநிலை மாற்றத்தினால் புவி வெப்பநிலை ஆண்டொன்றுக்கு சராசரியாக இயல்பைவிட 1.1 டிகிரி செல்சியஸ் அதிகரித்திருக்கிறது.
- 2040-க்குள் புவியின் வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.
- அதன் விளைவால் மனித இனம் உள்பட உலகில் உயிரினங்கள் வாழ முடியாத நிலைமை உருவாகக்கூடும்.
- ஜெர்மனியின் பெர்லின் நகரில் 1995-ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் முனைப்பு காரணமாக முதலாவது பருவநிலை உச்சி மாநாடு கூடியது.
- 'புதை படிவ எரிசக்தி மனித இனம் பயன்பெறுவதற்காக இறைவன் கொடுத்த கொடை' என்று அஜர்பைஜான் அதிபர் கருதும் நிலையில் எந்த அளவுக்கு மாநாட்டில் கரியமில வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கான முனைப்பு காணப்படும் என்கிற ஐயப்பாடு எழுகிறது.
- அதுமட்டுமல்ல, பருவநிலை பாதிப்புக்கு முக்கியக் காரணமான கரியமில வாயு உமிழ்வை அதிகம் வெளியேற்றும் உலக நாடுகளின் தலைவர்கள், அஜர்பைஜான் மாநாட்டில் பங்கேற்கவில்லை என்பது எந்த அளவுக்கு இந்தப் பிரச்னை குறித்து அவர்கள் கவலைப்படுகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.
- அதிகமாக கரியமில வாயு உமிழ்வுக்குக் காரணமான 13 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.
- 2023 ஆய்வின்படி, அந்த 13 நாடுகள் தான் 70% கரியமில வாயு உமிழ்வுக்கு காரணமானவை.
- பாரீஸ் ஒப்பந்தத்துக்குக் காரணமான பிரான்ஸ் நாட்டின் அதிபர் இமானுவல் மேக்ரான் கலந்து கொள்ளவில்லை. மேக்ரான் மட்டுமல்ல, உலக மக்கள்தொகையில் 42% பங்கு வகிக்கும் நாடுகளான அமெரிக்கா, சீனா, இந்தியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் நேரடியாகப் பங்குபெறாததை பருவநிலை மாற்றம் குறித்த அவர்களது அக்கறையின்மையாகக் கருதத் தோன்றுகிறது.
- 2015 பாரீஸ் ஒப்பந்தத்தின்படி, 1.3 லட்சம் கோடி டாலர் அளவில் வளர்ச்சியடைந்த நாடுகள் கரியமில வாயு உமிழ்வை குறைப்பதற்காகவும், அதன் மூலம் ஏற்படும் இழப்புகளை ஈடுகட்டவும் வளர்ச்சியடையும் நாடுகளுக்கு வழங்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.
- அவையெல்லாம் ஒப்பந்த அளவில் இருக்கிறதே தவிர செயல் வடிவம் பெறவில்லை. இந்த நிதிப் பங்களிப்பில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் அப்போது விலக்களிக்கப்பட்டது.
- இப்போது இந்தியா, சீனா, வளைகுடா நாடுகள் உள்ளிட்டவை பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்கான இழப்பீட்டில் நிதிப் பங்களிக்க வேண்டுமென வளர்ந்த நாடுகளும், வளர்ச்சியடையும் நாடுகளும் வலியுறுத்துகின்றன.
- போதாக் குறைக்கு அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர் பாரீஸ் ஒப்பந்தத்தையோ பருவநிலை மாற்றத்தையோ சட்டை செய்வாரா என்பது சந்தேகமாகவே உள்ளது.

SURESH'